பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர்ஆண்டு2026ஐப்பசி07 செவ்வாய்க்கிழமை (24-10- 995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 336

Proof 1st Final Time Reader

### தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரி

# 10 ஆயிரம் ஈழத்தமிழர் நேற்று பிரான்ஸில் மாபெரும் பேரணி!

பாரிஸ், ஒக். 24

தமிழ் மக்கள் மீதான ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலையை ஐரோப்பிய நாடாளுமன்றம் தலையிட்டுத் தடுத்து நிறுத்த வேண்டும் எனக் கோரி பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் ஒன்றுகூடி நேற்று பிரான்ஸில் பிரமாண்டமான பேரணி ஒன்றை நடத்தினர்.

ஸ்ராஸ்பேக் நகரில் இருந்து ஆரம்பமான இப் பேரணியில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இருந்து வந்து சுமார் 10 ஆயிரம் ஈழத் தமிழர்கள் பங்குபற்றியதாக அறிவிக்கப்படுகிறது.

தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டு பேரணி ஆரம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நியுயோர்க்கிலும் ஆர்ப்பாட்டம்

நியுயோர்க், ஒக். 24

நியுயோர்க்கில் உள்ள ஐ.நா. பொதுச்சபைக் கட்டடத்துக்கு வெளியே நேற்று முன்தினம் அமெரிக்காவில் உள்ள சில மனித உரிமை இயக்கங்களுடன் இணைந்து ஈழத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

ஐ நா. சபையின் பொன்விழா கொண்டாட்டங்கள் ஆரம்பமாகவிருந்த வேளையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தமிழ் மக்களுக்கு எதிராக

(5 ஆம் பக்கம் பார்க்க)

# ஞாயிறு நடந்த கடும் சண்டையில் 2 அதிகாரிகள், 27 படையினர் பலி!

## முன்னேறும் முயற்சி நேற்று ஓய்ந்தது

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 24

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வலிகாமம் கிழக்கில்— அச்செழுப் பகுதியில் — நடந்த கடும் சண்டையின்போது—

இரண்டு அதிகாரிகளும், 27 படையினரும் பலியாகியதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இதனைவிட அதிக எண்ணிக்கையான துருப்புகளை இராணுவத்தினர் இழந்திருப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை காலை முதல் இரவு வரை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ச்சியாகக் கடும் சமர் நடைபெற்றது

அச்செழுவில் இருந்து முன்னேறுவதற்கு இராணுவத்தினர் எடுத்த முயற்சியைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு விடுதலைப் புலிகள் கடும்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்றும் படையினர் அகோர ஷெல் வீச்சு!

### ஒருவர் பலி! உடைமைகள் நாசம்!!

யாழ்ப்பாணம் ஒக். 24

"சூரியப் பிரகாசம்" இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் நேற்றைய தினமும் மக்கள் வாழ்விடங்கள் மீது அகோர ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

அதேவேளை பலாலி முகாமில் இருந்தும் ஆட்லறி ஷெல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### ஊரடங்கு நீக்கம்

கொலன்னாவை, ஊருகொடவத்த எண்ணெய்க் களஞ்சியங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை அடுத்து கொழும்பு நகரின் சில பகுதிகளில் அமுல் படுத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுடன் நீக்கப்பட்டதாக அரசு அறிவித்தது. [ஐ-3]

## புக்காரா, சுப்பசொனிக் நேற்று மாலை குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஒக். 24

குடாநாட்டு வான் பரப்பினுள் நேற்று மாலை 4 மணியளவில் திடீரெனப் பிரவேசித்த புக்காரா மற்றும் சுப்பசொனிக் விமானங்கள் வலி கிழக்குப் பகுதிகள் மீது குண்டுகளை வீசித் தாக்கின.

வானில் மிக உயரத்தில் முகில் கூட்டங்களுக்கு மேலே பறந்தவாறு பல தடவை வட்டமிட்ட விமானங்கள், அவ்வாறு பறந்தவாறே இலக்கின்றிக் குண்டுகளை வீசின.

வலி. கிழக்குப் பகுதியில் மக்கள் வாழ்விடங்கள் மீது குண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மொனராகல பகுதியில் 19 சிங்களவர் கொலை!

கொழும்பு, ஒக். 24

மொனராகல மாவட்டத்தில் கல்லிமலைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 19 சிங்களவர்கள் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 60 பேர் அடங்கிய ஆயுததாரிகள் தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்த வீடுகள், கடைகளையும் தீக்கிரையாக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது

கொல்லப்பட்டவர்களில் ஐவர் சிறுவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ★ குடாநாட்டுத் தேவைக்கு

# மா ஏற்றிவர அமர்த்திய ஹெந்தலவில் ஆயுதங்கள்

குடாநாட்டில் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்து அவசரமாக திருமலையில் இருந்து மா ஏற்றி வருவதற்காக யாழ் அரச அதிபரால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள "ஹெந்தல" கப்பல் — படையினருக்கான ஆயுத தளபாடங்களை ஏற்றிக் கொண்டு கடந்த வாரம் காங்கேசன்துறைக்கு வந்து திரும்பியதாகத் தெரிய வந்துள்ளது.

வடபகுதிக்கு மா ஏற்றிச் செல்லப்படுவதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு கொழும்பில் அறிக்கைகளை வெளியிட்டுவரும் வேளையில் —

கொழும்பு துறைமுகத்தில் உள்ள படையினருக்கான இறங்கு துறையில் இருந்து ஒரு தொகுதி ஆயுத தளபாடங்களையும், படையினருக்குத் தேவையான பொருள்களையும் ஏற்றிக் கொண்டு இக்கப்பல் காங்கேசன் துறைக்கு வந்து திரும்பியிருக்கிறது.

யாழ். மாவட்டத்துக்கு மா ஏற்றி வருவதற்கென அரச அதிபரால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட பின் இக்கப்பல் முன்னர் பல தடவைகள் திருமலையில் இருந்து கொழும்புக்கு மா ஏற்றிச் சென்றது தெரிந்ததே.

இதேவேளை —

மீண்டும் இக்கப்பலில் யாழ். மாவட்டத்துக்கு [illegible] சமயம் [illegible] இன்றை என்று அறியவந்தது. [ஐ-3]

## சூரிய கிரகணத்தை கண்ணால் பார்க்காதீர்!

### சுகாதார அதிகாரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 24

இன்று காலை இடம்பெறவுள்ள சூரியகிரகணத்தை எக்காரணம் கொண்டும் பார்ப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்று இடம்பெறவுள்ளது முழுமையான கிரகணமாக அல்லாது பகுதியாக இருப்பினும் கூட அதனைப் பார்க்க முயல்வது அபாயகரமானது என்றும்—

அதனால் கண்பார்வையை இழக்க நேரிடலாம் என்றும் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வை. ஸ்ரீகாந்தா எச்சரித்துள்ளார்.

மக்கள் மத்தியில் பேசப்படும் எந்த முறையும் கிரகணத்தைக் கண்ணால் பார்க்க பாதுகாப்பானது

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியப் படையால் கொல்லப்பட்ட

# ஆஸ்பத்திரி ஊழியரின் 8-ம் ஆண்டுநினைவு அஞ்சலி

இந்தியப் படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் படுகொலை செய்யப்பட்ட 21 ஊழியர்களினதும் 8 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு 21 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுஷ்டிக்கப்பட்டது.

21 ஊழியர்களினதும் உருவப் படங்களுக்கு 21 ஈகைச் சுடரேற்றி, மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆஸ்பத்திரி நிர்வாக உத்தியோகத்தர் திரு பத்மநாதன் முதல் சுடரை ஏற்ற அதனைத் தொடர்ந்து உறவினர்களால் ஈகைச் சுடரேற்றப்பட்டது.

பணிப்பாளர் டாக்டர் செல்வி ந. கனகரட்ணம் மலர் மாலை அணிவித்ததைத் தொடர்ந்து உறவினர்களும் ஊழியர்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலியின் இறுதியில் இரண்டாவது நிர்வாக உத்தியோகத்தர் திரு நாகலிங்கம் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தைத் தொடர்ந்து இறந்தவர்களின் நினைவாக நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் "தக்கவிக்கரம்" என்ற நூல் வெளியீட்டு வைபவமும் நடைபெற்றது.

நினைவஞ்சலியை முன்னிட்டு ஆஸ்பத்திரி அனைத்து ஊழியர்களும் கறுப்புப்பட்டி அணிந்தவாறு கடமை பார்த்தனர். (க-15)

---

# 3ம் - ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 24 - 09 - 1974

வீரச்சாவு: 24 - 10 - 1992

லெப்டினன்ட் நெடுமாறன்

**கிருஸ்ணபிள்ளை கிருபாகரன்**

(குமரேசு)

*(மண்கிண்டி இராணுவ முகாம் காவலரண் தகர்ப்பில்)*

இலக்கில் இதயத்தில் இலட்சியத்தில் - தீபமாய் விளங்கிய கிருபனே!
ஆண்மைக்கும் பெருமைக்கும் - தீபம் நீ
மண்ணிற்கும் நீ மாவீர தீபம்
உன் பூவுடலும் காணவில்லை
பொன் மொழியும் கேட்கவில்லை
விண்ணிற்கு நீ வாராயோ - உம்மிடம்
நாம் வீரமொழி கேட்பதற்கு

உன் பிரிவால் ஆறாத்துயரில் நீறாகும் நெஞ்சங்கள்
— குடும்பத்தினர்

பெருந்தெரு,
புலோலி தெற்கு,
புலோலி. (39121)

---

## நீங்கா நினைவுகளில்

# முதலாம் வருடம்



உதயம்: 30 – 09 – 1929

உதிர்வு: 24 – 10 – 1994

அமரர்

**ஞானப்பிரகாசம் ஸ்ரனிஸ்லோஸ்**

*(இளைப்பாறிய தலைமை லிகிதர் சுகாதாரத் திணைக்களம்)*

நாமுயர வரம்பாகி
வரும் துயர் தனைத் தாங்கி
வாழ்வளித்த தந்தையின்
நினைவுகள் என்றும் நெஞ்சினில்

அன்னாரது ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி (24 – 10 – 1995) இன்று மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் காலை 6-15 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கேற்க அனைவரையும் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரி.

'ஜோஸ் லூர்ட்ஸ்'
மிருசுவில். (39150)

---

# தேடுதலின் போது சூடு!

# கொழும்பில் இருவர் பலி!!

## குழப்பம் விளைவித்த பலர் கைது!

கொழும்பு, ஒக். 24

கொழும்பில் இனவன் செயல்களை ஏற்படுத்த முயற்சித்த பலர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் மா அதிபர் டபிள்யூ பி. ராஜகுரு தெரிவித்துள்ளார்.

எண்ணெய்க் குதங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்ய தீவிர நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை —

நேற்றுமுன்தினம் இரவு ஊரடங்கு வேளையில் தேடுதல் நடத்திய பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பொதுமக்கள் இருவர் உயிரிழந்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

தேடுதலில் ஈடுபட்ட படையினர் தவறுதலாக இவர்களைச் சுட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சந்தேகத்துக்கு இடமானவர்களைக் கைது செய்ய வசதியாக விசேட தகவல் பிரிவு ஒன்று கொழும்பில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விசேட பாதுகாப்புத் திட்டங்கள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மற்றும் அதன் அருகில் உள்ள கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயம் ஆகியவற்றுக்கு புதிய பாதுகாப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமான இடங்கள் அனைத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. (ஐ-க-3)

# 1,000 கோடி ரூபாவுக்கு நட்டம்; பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு

கொலன்னாவ, ஊருசொட வத்த குதங்கள் தொடர்ந்து எரிந்து கொண்டிருப்பதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

சில ஆய்வாளர்களின் கணிப்பின்படி, இந்த நட்டம் ஆயிரம் கோடியையும் தாண்டிவிடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

75 ஆயிரம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய், 53 ஆயிரம் மெற்றிக்தொன் டீசல் எண்ணெய், 30 ஆயிரம் மெற்றிக்தொன் விமான எண்ணெய் மற்றும் தொகை மதிப்பிடப்படாத அளவு மண்எண்ணெய் என்பன கொலன்னாவ எண்ணெய்க் குதத்தில் இருந்து எரிந்து நாசமாகியுள்ளன.

இதற்கிடையில் —

கொழும்பில் உள்ள எண்ணெய்க் குதங்கள் அரசுக்கு முக்கியமானவை என்றும் அவற்றை தாக்குவதன் மூலம் ஏற்கனவே நலிந்து போயுள்ள இலங்கையின் பொருளாதாரத்துக்கு புலிகள் பலமான அடி கொடுத்துள்ளார்கள் என்றும் பி.பி.ஸி. கருத்து வெளியிட்டுள்ளது.

பொருளாதார இலக்கு மீது புலிகள் நடத்திய முதலாவது பெரிய தாக்குதல் இது வாகும்.

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் நடக்கும் போரில் இத் தாக்குதல் முக்கிய வளர்ச்சிக் கட்டத்தை குறிக்கிறது—என்று பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

### கிளிநொச்சியில் கமக்காரர் அறிமுக அட்டை

95ஆம், 96ஆம் காலபோகத்தில் விவசாயிகள் வேளாண்மையில் ஈடுபடுத்துவதற்கு வசதியாக தமிழீழ பொருண்மிய மேம்பாடு நிறுவனம் கமக்கார அறிமுக அட்டைகளைத் துரிதமாக விநியோகம் செய்து வருகின்றது.

கிளிநொச்சி இருவிணைபுரம் கிராம விவசாயிகள் சுமார் 70பேருக்கு சென்றவாரம் அறிமுக அட்டை வழங்கப்பட்டது மேலும் அடுத்த வாரத்தில் பாரதிபுரம் மலையாளபுரம் வன்னேரிக்குளம் ஆகிய கிராமங்களில், உள்ள சுமார் 200 விவசாயிகளுக்கு இதனை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

அத்துடன் முழுவன்னிப் பிரதேசத்திலும் விவசாயிகளுக்கு கமக்காரர் அறிமுக அட்டை வழங்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விவசாய சூழல் பாதுகாப்புப் பகுதி நடவடிக்கை எடுத்து வருகிறது

# இனக்கலவரத்தைத் தூண்ட சில சக்திகள் முயற்சியாம்

## அமைச்சர் தர்மசிறி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 24

83 ஆம் ஆண்டு நடந்தது போன்ற இனக்கலவரத்தை மீண்டும் ஏற்படுத்த சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன.

தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க மேற்கண்டவாறு கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

24 ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பின் பாதுகாப்பை உறுதி செய்ய அமைக்கப்பட்ட சிவில் தொண்டர் படை போன்ற அமைப்பு மீண்டும் அமைக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைதியாக இருக்குமாறு பொதுமக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

பிக்கிலை வாதிகளின் தாக்குதல்கள் இன ஒற்றுமையை குலைத்து நாட்டை சீரழிக்கும் நோக்கம் கொண்டவை என்றும் அவர் குறிப்பிட்டார். (இ-3)

# பொத்தி வளர்க்கப்படும் பிள்ளைகள்: ராணுவம் வந்தால் என்ன செய்வர்?

## புலிகள் பிரமுகர் பாலகுமாரன் கேள்வி

நாங்கள் பிள்ளைகளைப் பிடிக்கவில்லை பொத்தி வளர்க்கப்படும் பிள்ளைகள் நாளை இராணுவம் வந்தால் எந்த நிலைக்கு உள்ளாக்கப்படுவார்கள்? இதை உணர அறிவியல் கருத்துக்களை நாம் நோக்க வேண்டும் அரசியல் அறிவுடன் இணைந்ததாக மக்கள் மனதை பண்படுத்தக் கூடியதான பணிகளைத் தொடரவேண்டும்.

நல்லூரம் சஞ்சிகையின் மூன்றாவது ஆண்டுமலரை வெளியிட்டுப் பேசிய விடுதலைப்புலிகள் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் இவ்வாறு கூறினார்.

நல்லூரம் சஞ்சிகையின் மூன்றாவது ஆண்டு மலர் வெளியீட்டுவிழா யாழ். பிரதேசச் செயலர் வரதீஸ்வரன் தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

திரு. பாலகுமார் மேலும் பேசும்போது:

சிங்களப் பாடசாலைகளிலும், விகாரைகளிலும் தமிழினம் இங்கு வாழத் தகுதியற்றது எனப் போதிக்கப்படுகிறது. இதேவேளை சமீபத்தில் வீசப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தானும் தாய் என்று சந்திரிகா சொல்லியுள்ளார். இப்படிச் சொல்லி தனது நோக்கங்களை நிறைவேற்ற முயற்சிக்கிறார் அவர்.

யாராவது ஒரு போராளி ஒரு தவறுவிட்டால் இயக்கம் முழுவதையும் தவறாகப் பார்க்கக்கூடாது.

இன்றைய சூழ்நிலை காரணமாக இடம்பெயர்வுகள் காரணமாக மக்கள் மத்தியில் கோபம், சினம் காணப்படுகின்றன. அவர்கள் பலவாறு பேசுகிறார்கள். உண்மையில் இது அரசியல் தெளிவின்மையால் வந்ததே.

கடந்த காலங்களில் நாம் ஏமாற்றப்பட்டதற்கும் அரசியல் நுணுக்கம் தெரியாத தலைமைகளே காரணம். அவர்களது எச்சங்களாக நமது மக்கள் வாழக் கூடாது. என்றார்.

மாணவர்களிடையே இடம்பெற்ற குறுக்கெழுத்துப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் வழங்கினார்.

திரு. பாலகுமாரனிடமிருந்து முதல் பிரதியை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடமாணவர் திரு. இ. யமுனானந்தன் பெற்றுக் கொண்டார்

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. ஸ்தானிகராலயம் உள்ளூர் அகதிகளுக்கும் உதவ வேண்டும்

## ஜெனிவா உயர்ஸ்தானிகருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஒக். 24

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் அகதிகள் விடயத்தில் ஒரு நாட்டிலிருந்து இன்னோர் நாட்டிற்கு இடம் பெயர்வோரே அகதிகள் என்ற அதன் கொள்கை நிலைப்பாட்டை மாற்றி உள்ளூரில் இடம்பெயர்வோருக்கும் உதவவேண்டும் என்று யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

சமீபத்தில் யாழ். வந்திருந்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளிடம் ஜெனிவாவில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகருக்கென மேற்படி இணையத்தால் கையளிக்கப்பட்ட மகஜரிலேயே இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சென்ற வாரம் யாழ். வந்திருந்த அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் கடந்த 19 ஆம் திகதி இணையத்தில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய/பிரதிநிதிகளை சந்தித்து உரையாடினார்கள் அப்பொழுதே இம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1990 இல் இருந்து யாழ். குடாநாட்டில் கிராமத்திலிருந்து கிராமத்திற்கும், மாவட்டத்தில் இருந்து மாவட்டத்திற்குமே மக்கள் இடம் பெயர்கின்றனர். விவசாயிகள், மீனவர்கள், அன்றாடம் உழைத்து வாழ்க்கை நடத்துபவர்கள் முதலியோர் இவ்வாறு இடம்பெயர்ந்து அநேகமாக பாடசாலைகளில் தங்குகின்றனர். இதனால் பாடசாலைகள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கு தற்காலிக குடியிருப்புவசதி, உணவு ஆகியன தற்போது உடனடித் தேவையாகவுள்ளன.

பிரதான போக்குவரத்து சாதனமாக சைக்கிள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் உதிரிப்பாகங்கள், சவர்க்காரம், உரம், எரிபொருள் ஆகியன தடைசெய்யப்பட்டுள்ளன. வங்கிகளில் பணப்புழக்கம் தடைப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்தவர்கள் இருக்கும்இடங்களில் பொருள் தட்டுப்பாட்டினால் எல்லா பொருள்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களே பொறுப்பேற்க வேண்டிய நிலையும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் நிதிப் பற்றாக்குறையும் காணப்படுகிறது.

இவற்றைக் கருத்தில் கொண்டு அகதிகள் விடயத்தில் கொள்கையை மாற்றி உணவு, தற்காலிக முகாம் அமைப்பதற்கு தேவையான பொருள்கள், மருந்து, குடிநீர் போன்ற வசதிகளுக்கு உதவி செய்யுமாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-4)

## சைக்கிள் திருட்டு

பாண் வாங்குவதற்காக கியூ வரிசையில் நின்றவரின் சைக்கிள் ஒன்று பட்டப் பகலில் திருடப்பட்ட சம்பவம் மானிப்பாயில் இடம்பெற்றுள்ளது.

மானிப்பாய் பிரதான வீதியிலுள்ள வெதுப்பகம் ஒன்றின் முன்பாக கடந்த புதன்கிழமை இத்திருட்டு சம்பவம் இடம்பெற்றது.

சுதுமலையை சேர்ந்த ஒருவரின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாகவும் காவல்துறை பணிமனையில் இது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-135)

## தெல்லிப்பழை - உடுவில்

# தேசிய பாதுகாப்பு நிதி பற்றிய கலந்துரையாடல்

தெல்லிப்பழை / உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் இதுவரை பாதுகாப்பு நிதி ஒப்புதல் பெறாதவர்களும்—

கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளாதவர்களும்— இன்று 24ஆம் திகதி காலை 8-00மணி தொடக்கம் பிற்பகல் 5-00மணி வரை இணுவில் மத்திய கல்லூரியில் சந்திக்குமாறு கோரப்பட்டுள்ளது.

★ தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த இடம் பெயர்ந்த அனைத்து மக்கள்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த உடுவில் தென் மேற்கு, உடுவில் தென்கிழக்கு, உடுவில் மத்தி, உடுவில் வடமத்தி, உடுவில் வடக்கு, சங்குவேலி, இணுவில் தென்மேற்கு, இணுவில் கிழக்கு, இணுவில் மேற்கு, இணுவில் தெற்கு, தாவடி கிழக்கு, தாவடி தெற்கு, தாவடி வடக்கு, சுன்னாகம் வடக்கு, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் மத்தி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் மேற்கு, கந்தரோடை, ஏழாலை மேற்கு, ஏழாலை தென் மேற்கு, ஏழாலை தெற்கு, ஏழாலை கிழக்கு, ஏழாலை வடக்கு, ஏழாலை மத்தி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஈவினை, குப்பிளான் தெற்கு, குப்பிளான் வடக்கு, ஆகிய கிராம சேவைப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ)

# இன்று பாதுகாப்பு நிதி பெறும் இடங்கள்

யாழ்ப்பாணம், ஒக் 24

சண்டிலிப்பாய் வட்டம்

சண்டிலிப்பாய் வட்டத்தில் பின்வரும் இடங்களில் தேசிய பாதுகாப்பு நிதி பெற்றுக் கொள்ளுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் மத்தி, பிரான்பற்று, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய் மேற்கு மானிப்பாய் மேற்கு கிராம சேவகர் அலுவலர் மானிப்பாய் மேற்கு கட்டுடை (முதலியார் வீடு) பிற்பகல் 2-5மணி.

சுதுமலை வட்டம்

சுதுமலை வடக்கு, சுதுமலை தெற்கு, உரப்புலம் ஆனைக்கோட்டை, சாவற்காடு தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பகம் சுதுமலை சந்தி, மானிப்பாய் 9—5 மணி

நவாலி வடக்கு, நவாலி கிழக்கு, நவாலி தெற்கு, நவாலி வை. எம். சி. ஏ முற்பகல் 9—11-30மணி.

நாளை

நல்லூர் சங்கிலியன் தோப்புப் பகுதி கிராம சேவகர் பிரிவுகள் ஜே/109, ஜே/91 நல்லூர் சாதனா பாடசாலை பிற்பகல்2—5-30 மணி.

தொண்டமானாறு தெற்கு ஜே/383 தொண்டமானாறு வடக்கு ஜே/384, கெருடாவில் தெற்கு ஜே/385, கெருடாவில் வடக்கு ஜே/386, கெருடாவில் கிழக்கு ஜே/387, வல்வெட்டித்துறை வடமேற்கு ஜே/388, வல்வெட்டித்துறை வடமத்தி ஜே/389, வல்வெட்டித்துறை வடகிழக்கு ஜே/390, வல்வெட்டித்துறை தென் மேற்கு ஜே/391, வல்வெட்டித்துறை தென்கிழக்கு ஜே/392, பொலிகண்டி மேற்கு ஜே/393, பொலிகண்டி கிழக்கு ஜே/394, பொலிகண்டி தெற்கு ஜே/395, வல்லை கல்வி நிலையம் வல்வெட்டித்துறை காலை 10மணி.

# நாளை நிதி கையளிப்பு

தெல்லிப்பளை / உடுவில் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுக்கு உட்பட்ட மக்கள்- இது வரை தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதல் அளித்துள்ளவர்கள் நாளை 25ஆம் திகதி காலை 9-00 மணி முதல் பிற்பகல் 4-00 மணி வரை தங்கள் தேசிய பாதுகாப்பு நிதியைச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது

★ தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த இடம் பெயர்ந்த அனைத்து மக்களும்.

★ உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த உடுவில் தென் மேற்கு, உடுவில் தென் கிழக்கு, உடுவில் மத்தி, உடுவில் வடமத்தி, உடுவில் வடக்கு, சங்குவேலி, இணுவில் தென் மேற்கு, இணுவில் கிழக்கு, இணுவில் மேற்கு, இணுவில் தெற்கு, தாவடி கிழக்கு, தாவடி தெற்கு, தாவடி வடக்கு, சுன்னாகம் வடக்கு, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் மத்தி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் மேற்கு, கந்தரோடை, ஏழாலை மேற்கு, ஏழாலை தென் மேற்கு, ஏழாலை தெற்கு, ஏழாலை கிழக்கு, ஏழாலை வடக்கு, ஏழாலை மத்தி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஈவினை, குப்பிளான் தெற்கு, குப்பிளான் வடக்கு, ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் இதில் அடங்குவர். (இ)

# சூரபன்மனின் வரலாறு-1

### கந்தபுராணக் காட்சிகள்

நெடுங்காலத்துக்கு முன்னர் சமுத்திர மத்தியில் சாகத்தீவு என்ற தீவு இருந்தது. அதை ஆட்சி செய்த அரசனான பிரபாகரனுக்கு சூரன், பதுமன் என இரண்டு சற்புத்திரர் பிறந்தனர்.

சூரனுக்கு வயது வந்ததும் அவனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துத் தவம் செய்ய வனம் சென்றான் பிரபாகரன். சூரன் நீதி நெறி நின்று ஆட்சி புரிந்த ஒரு தினம் அகத்திய முனிவர் அவனிடம் சென்றார்.

அகத்திய முனிவரை சூரனும் பதுமனும் உபசரித்து வணங்கி நின்றனர். அன்பான உபசாரத்துக்கு மகிழ்ந்த அகத்தியர் "சாத்விகருணம் நிறைந்தவர்களே, உங்களைக் காண வேண்டும் என்ற ஆவலினால் இவ்விடம் வந்தேனாயினும் உங்களுக்குச் சொல்ல வேண்டிய செய்தி ஒன்று உண்டு. பொருள் நிறைந்த அந்தச் செய்தியை சித்த சுத்தமுடையவர்களுக்கு அன்றி ஏனையோர்க்குச் சொல்லக்கூடாது. கவனித்துக் கேளுங்கள் என்றார்.

"வேதங்களும் உபநிடதங்களும் விளக்க முடியாத சிறப்புகளை உடையவர் சுப்பிரமணியப் பெருமான். அவருடைய திருவடித் தாமரைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறது மயில். கோழிக் கொடியும் பகைவரை அழிக்கும் ஆற்றல் பெற்ற வேற்படையும் அவருடைய திருக்கரத்தில் விளங்கிக் கொண்டிருக்கின்றன. உயிர்களுக்குப் போகத்தை அருளுகின்ற கடப்பமாலை அவருடைய திருமார்பில் திகழுகிறது. முத்திக்கு வித்தாகும் அவருடைய பாதார விந்தங்களைத் தரித்து ஆட்சி புரியுங்கள்" என்று கூறிச் சென்றார்.

அகத்திய முனிவரின் அறிவுரைகளைக் கேட்ட சூரனும் பதுமனும், தாமும் முருகப் பெருமானுக்கு வாகனமாகவும் கொடியாகவும் சேவிக்க ஆவல் கொண்டு மயில் கோழி ஆகியவற்றைத் தனித்தனி சிந்தித்து, அப்பதவிகளை அடைய, ஸ்ரீ சயில வனத்தில் நெடுங்காலம் தவம் இருந்தனர்.

கைலயங்கிரியின் ஒருபுறத்தே நின்ற விட்டுணுவின் வாகனமாகிய கருடனும், பிரமாவின் வாகனமாகிய அன்னமும் மயில், கோழி ஆகியவற்றின் அருகே சென்று "சூரனும் பதுமனும் உங்கள் பதவிகளைப் பெறத் தவம் இயற்றுகின்றனர். விரைவில் அவர்கள் விரும்பிய பதவிகளைப் பெறுவர். விழிப்பாக இருங்கள்" என்று கூறிச்சென்றனர்.

கோபம் கொண்ட மயிலும் கோழியும் பூமிக்கு வந்து சூரனுக்கும் பதுமனுக்கும் முன் தோன்றி "நீங்கள் எங்கள் பதவிகளைப் பெற விரும்பினீர்கள். ஆகையால் நீங்கள் பூதகணத் தலைவர்களாகிக் கயிலையங்கிரியில் இருங்கள்" என்று சாபமிட்டுச் சென்றன.

பூதகணத் தலைவர்களாக மாறிய சூரனும் பதுமனும் கயிலையங்கிரிக்குச் சென்று மயிலையும் கோழியையும் வணங்கி "அடியேங்கள் விரும்பிய தவம் எமக்குக் கிடைக்குமா?" என்று இரந்து நின்றனர். மிகவும் இரக்கம் கொண்ட மயில் "நீங்கள் இந்தக் கயிலை மலையில் அநேக காலம் இருந்தால் தவப்பயனைப் பெறுவீர்கள்" என்றது.

கருடனும் அன்னமும் தங்கள் தவப் பயனை இழக்கும்படி செய்தன, என்ற எண்ணத்தை மனதில் பதித்து பகை உணர்வுடன் இருந்தனர் பூதகணத் தலைவர்கள்.

— மூளாய் அருணாசலம்

## வித்தாரம்

என்ன அறிவழகா, நேற்று ஆளை இங்காலைப் பக்கம் காணயில்லை... தீவாளி அமளியோ...?

அது தானே, தீவாளி கொண்டாடுற சூழ்நிலையும் மனநிலையுமே இப்ப இருக்குது... ஆமிக்காறன்கள் அடிக்கிற ஒவ்வொரு ஷெல்லும் சனங்களின்ரை வயித்திலை புளியை எல்லே கரைக்குது...!

இப்பத்தச் ஷெல்லின்ரை பயங்கரச் சத்தமே சனத்தை இடம்பெயர வைக்கப் போதுமானதாய் இருக்குது... சனம் ஏற்கனவே இடம்பெயரவில்லை எண்டால் இந்தச் ஷெல்லுக்குஉயிரழிவுஎக்கச்சக்கமாய் இருந்திருக்கும்...

முந்தநாள் ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் இடையில் ஒரு முழக்கம் முழங்கிவிட்டான்கள்... கேட்டிருப்பீர்...! பத்து பன்னிரண்டு மைல் தொலைவிலை உள்ள வட்டுக்கோட்டைப் பக்கம் கூடப் படுபயங்கரமாய் அதிர்ந்திதாம்!

தீவாளிக் கதையைத் தொடக்கிப் போட்டு ஷெல்லைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்... தீவாளி வருகுது எண்ட எண்ணமே மக்களின்ரை மனதிலை இந்தமுறை இல்லை. தீவாளி வியாபாரம் என்று ஒண்டு இருக்கயில்லை எண்டு ரவுண் கடைக்காரர் சொல்லிச் சினம்...

ஏன்...? நேற்றுக் கூட தீவாளி எண்ட ஒரு சின்ன அசுமாத்தம் கூட இருக்கயில்லை. எந்த ஆக்களின்ரை முகத்தைப் பார்த்தாலும், ஏக்கமும், எதையோ பறிகொடுத்த சோகமுமாகத் தான் இருக்குது......!

அடுத்த நேரப்பாடு என்ன வாக இருக்கும் எண்ட யோசனையில சனம் வெந்து வெதும்பிக் கொண்டிருக்கையில், ஒ[illegible]டிவையோ...?

இருக்கிற இடத்தைவிட்டு எப்ப எழும்ப வேண்டி வரும் எண்டு ஏங்குகிற சனம் ஒருபக்கம்... சொந்த வீடு வாசலை விட்டு இப்பிடி நாடோடியளாயும், நாய்கள் போலையும் அலையும் காலம் வந்திட்டுதே எண்டு மனம் வேகும் சனம்மறுபுறம்... எண்[illegible]ம் கதி கலங்கி நிற்கயிக்கை...

கொழும்பிலை உள்ள மந்திரிமாரும் மற்றவையும் சொல்லுறதைக் கேட்டா பொல்லாத ஆத்திரம் தான் வருகுது அறிவழகா ..!

தீவாளிச் சத்தமெண்டா வழமையாய் சீனவெடிச் சத்தம்தான் கேட்கும்... ஆனால் நேற்று மிக்காறற்றை ஷெல் சத்தம் தான் சீனவெடியாய் வெடிச்சிது ... விழுவான்கள்......

இப்படி எல்லாம் எங்கடை சனத்துக்கு எதிராகப் பயங்கரவாதம் நடத்தி மக்களின்ரை வாழ்க்கையை அழித்தெடுத்துக் கொண்டு......

தங்கடை யுத்தம் தமிழ் மக்களின் விடிவுக்காகத்தான் நடக்குது எண்டெல்லே நாக்கூசாமல் சொல்லுறினம் உவை...

குடாநாட்டுச் சனத்திலை அரைவாசிப் பேர் அகதி முகாம்களிலை அடைபட்டுக் கிடந்து சாப்பாட்டுக்கு வழியில்லாமல் பட்டினி கிடக்குதுகள். வாழ்க்கையே வனாந்தரமாய்ப் போய்விட்டது போன்ற மன உணர்ச்சலுடன் நாள்களைக் கடத்திதுகள்.

இது தான் அரசாங்கம் தமிழ் மக்களுக்குத் தரும் விடுதலையாம்... இதுவும் சொல்லுவினம் இப்பிடி எத்தனையும் சொல்லுவினம்...

இன்னும் கொஞ்ச நாளிலை தமிழருக்காக, இங்கை சொர்க்கத்தைக் கொண்டு வரப்போவதாகவும் சொல்லுவினம்... பாரேன்...!

— கொண்டோடி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பழைய ஓடுகள், மரங்கள், நிலைகள், யன்னல்கள் தூண்கள் கொங்கிறீற் கற்கள் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: தி. கிருஸ்ண ராஜா, 190, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
(39101)

### மலிவு விற்பனை

நல்ல இனப்பன்றிக் குட்டிகளும், இறைச்சிக்குரிய பன்றிகளும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். செவ்விளநீர் நாற்றும் விற்பனைக்குண்டு. அண்ணா பாம், இணுவில். (சி-2527)

### வணிக புள்ளி விபரவியல்

வெளிவந்து விற்பனையாகின்றன. A/L புதிய பாடத்திட்டத்திற்கு உரியது. ரூபா 250/-. யாழ்ப்பாண புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
(சி-1739)

## வலி. மேற்கில் மாவீரருக்கு அஞ்சலி

சங்கானை வட்டப் பொறுப்பாளர் கிரனுக்கு அஞ்சலி செலுத்தி கடந்த வியாழக்கிழமை வலிகாமம் மேற்கு பிரதேசம் முழுவதும் தோரணங்கள் வாழைகள் கட்டப்பட்டிருந்தன. வீதிகள் எங்கும் சிவப்பு மஞ்சள் நிறக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

வர்த்தக நிலையங்கள், சந்தைகள் யாவும் மூடப்பட்டு முழு அளவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

சங்கானை வட்டப் பொறுப்பாளர் கிரன் புதன்கிழமை இரவு வலிகாமம் கிழக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது வீரச்சாவு அடைந்தார்.
(ஒ-175)

## மொழித்திறன் விருது

இருபாலை தமிழ் மாமன்றம் மாணவர்களிடையே நடத்தி வரும் "மொழித்திறன்விருது" போட்டிகள் இந்த வருடமும் வழமை போல் நடைபெறவுள்ளன.

இத் தேர்வு ஐந்தாம் ஆண்டு முதல் பதினோராம் ஆண்டு வரை நடைபெறும்.

# வசந்தராஜாவின் பிரசாரத்தினால் அரசுக்கு இக்கட்டான நிலைமை

கொழும்பு, ஒக் 24

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் வசந்தராஜா வெளிநாடுகளில் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக நடத்தி வரும் பிரசாரம் ஸ்ரீலங்கா அரசுக்கு இக்கட்டான நிலைமை ஏற்படுத்தி இருப்பதாக "திவயின" சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

வசந்தராஜா வெளிநாட்டு தொலைக்காட்சிச் சேவைகளுக்குப் பேட்டிகள் அளிக்க ஆரம்பித்துள்ளார் எனவும்—

கடந்த வாரம் கனடா தொலைக்காட்சி சேவைக்கும் பேட்டி அளித்தார் எனவும்—

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பல தலைவர்களின் நண்பனாக விளங்கிய வசந்தராஜா தமிழ் மக்களைப் பாதுகாப்புப் படையினர் கொன்றொழிக்கிறார்கள் எனச் சுமத்தும் குற்றச்சாட்டுகளினால் இலங்கை அரசுக்கும் பாரதூரமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் பிரசாரத்திற்கு எதிராக எதிர்ப் பிரசாரங்களை மேற்கொள்ள ஸ்ரீலங்கா அரசின் வெளிநாட்டுத் தூதரகங்கள் சில உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என தவல்கள் தெரிவிக்கின்றன என்றும் "திவயின" தெரிவித்துள்ளது.
[இ-ஒ-10]

## இராணுவத்திடம் சிக்கியவர்கள் இளவாலையில்

அச்சுவேலி - புத்தூர் பகுதியில் இராணுவத்தின் பிடியில் சிக்கிக் கொண்ட பொதுமக்கள் இளவாலைப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் அச்சுவேலிப் பகுதியில் உள்ள சைவாலயம் ஒன்றில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.
[க-11]

## ஐ. நா. தினம்

வடமராட்சி, ஒக். 24

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும் ஐக்கிய நாடுகள் தினம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் நாளை புதன்கிழமை நடைபெறும்.

கழகத் தலைவர் திரு. வே. தில்லைநாதன் தலைமையில் நடைபெறும் இத்தினக் கொண்டாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் கலாநிதி நா. ஞானக்குமரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

"ஐக்கிய நாடுகள் தாபனம் அதன் நோக்கங்களை நிறைவேற்றியுள்ளது" என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம் பெறும். (க-173)

## இளம் கண்டுபிடிப்பாளர் கண்காட்சியும் அறிமுகமும்

மாணவர் அறிவியல் கழகத்தினால் நடத்தப்படவிருக்கும் 1995ஆம் ஆண்டுக்கான கண்காட்சி எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் பங்குபற்றுபவர்களின் விண்ணப்ப முடிவுநாள் ஒக்ரோபர் 31 ஆம் நாள்வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மாணவர் அறிவியல் கழகத்தினால் இக்கண்காட்சி நடத்தப்பட்டு அந்தந்த ஆண்டுக்கான இளம் கண்டுபிடிப்பாளர்கள் துறை சார்ந்ததாக அறிமுகப்படுத்தப்பட்டு தேசிய மட்ட விருது வழங்கப்படவுள்ளது.

இந்த வகையில் இந்த ஆண்டு இளம் கண்டுபிடிப்பாளர்களைத் தெரிவு செய்யும் கண்காட்சியில் பங்கு கொள்பவர்களுக்கான விளக்கமும், விண்ணப்பமும் அறிவியல் கழக நிர்வாகச் செயலகத்தில் திங்கள் தொடக்கம் சனிக்கிழமை வரை காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம் என்றும் —

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதும், விண்ணப்பம் செய்தவர்களுக்கான விளக்கக் கலந்துரையாடல் நவம்பர் 6ஆம் நாள் அறிவியல் கழக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

## நடுநிலையம் உதவி

கொழும்புத்துறை, ஒக். 24

வலிகாமம் கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து! ஆனந்தம் வடலி வீதி கொழும்புத்துறை புனித செபமாலை மாதா கோயிலில் தங்கியிருக்கும் மக்களுக்கு யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம் உலர் உணவுப் பொருட்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சுமார் நானூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இக்கோயிலில் தங்கியுள்ளன.

# அச்சுவேலி ப. நெ. அ. கூ. சங்க நடவடிக்கை பாதிப்பு

வலி. கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தொழில் நடவடிக்கைகள் "இடி முழக்க" இராணுவ நடவடிக்கையால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன

எந்த விதமான உற்பத்தி, விற்பனை நடவடிக்கையும் இல்லாத நிலையில் சாவகச்சேரியில் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் செயற்படுகின்றது.

800க்கு மேற்பட்ட சீவல் தொழிலாளர்கள் தமது தொழிலை சங்கத்தின் கூடாக மேற்கொண்டு வந்தனர். 50க்கு மேற்பட்ட ஊழியர்கள் சங்கத்தில் பணியாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. [க-11]

## மர நடுகை கொடிவாரம்

வலி மேற்கு, ஒக். 24

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மரம் நடுகைக்கான கொடிவாரத்தை எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் முதலாம் திகதி வரை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளார். (ஒ-173)

# உணவில் தன்னிறைவு காண உழைத்திடுவோம் வாரீர்!

## தென்மராட்சியில் பிரசாரம்

பட்டினிச் சாவைத் தடுக்க எமது காணிகளில் உணவு உற்பத்திப் பயிர்களை பயிரிடுவோம் தமிழீழத்தில் உணவுத் தன்னிறைவைக் காணுவோம்!

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினரும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் இப் பகுதி மக்களுக்கு இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளனர்.

விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக ஒவ்வொரு கிராமத்திலும் குழுக்கள் அமைக்கப்பட்டு மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

வெற்று நிலமாக உள்ள காணிகளில் உணவுப் பயிர்களை பயிரிடுமாறும் கேட்கப்பட்டுள்ளது (ஒ-117)


## ஸ்ரீ முருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகளின் ஜெயந்தி தின விழா



ஸ்ரீ முருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகளின் 68 ஆவது ஜெயந்தி தின விழாவான (24 - 10 - 1995) இன்று சுவாமிகளின் அருளும் ஆசியும் பெற்றிருக்கும் முருகன் அடியார்கள் வெகு சிறப்பாக இவ் விழாவினை மானிப்பாய் ஸ்ரீ முருகன் அருள் நிலையத்தில் கொண்டாடுகின்றார்கள்.

– முருகன் அடியார்கள்.

[39108]


# நியூயோர்க் வந்த பிரச்சினைக்குரிய கம்யூனிஸ்ட் தலைவர் காஸ்ட்ரோ

நியூயோர்க்கில் நடைபெறும் ஐ நா. சபையின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ளும் 150 இக்கு மேலான நாடுகளின் தலைவர்களில் மிகவும் கவனத்தைப் பெறுபவர் கியூபாவின் தலைவரான பிடெல் காஸ்ட்ரோ ஆவார்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு.

காஸ்ட்ரோ பழைய மார்க்சிஸப் புரட்சித் தலைவர்களில் எஞ்சி இருக்கும் ஒருவர் என்பதும், 35ஆண்டுகளாக ஒரு நாட்டின் தலைவராக இருப்பவர் என்பதும் இன்றைய உலகில் முக்கியமான விஷயங்கள் ஆகும்.

ஆயுதப் புரட்சி மூலம் பற்றிஸ்ரா வலது சாரி ஆட்சியைத் தூக்கி எறிந்தது முதல் 35 ஆண்டுகளாக அவர் கியூபா நாட்டின் தலைவராகப் பதவி வகித்து வருகிறார்.

சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோஷலிச ஆட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சரிந்து விழுந்த நிலைமையிலும் கியூபா பழைய பாதையில் தொடர்ந்து செல்வதைச் சிலர் உலகத்தின் அற்புதங்களில் ஒன்றாகக்கூடக் கருதுகின்றனர்.

அமெரிக்க ஆட்சியாளர்களைப் பொறுத்த வரையில் கியூபா [illegible] ஒரு பாரிய பிரச்சினையாகவே இருந்து வருகிறார்கள்.

ஐ நா. சபையின் கொண்டாட்டங்களை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் ஆரம்பித்து வைக்கும் நிலைமையில் பிடெல் காஸ்ட்ரோ அங்கு உரை நிகழ்த்த இருக்கிறார்.

ஆனால் அமெரிக்க அரசாங்கம் அதன் உத்தியோகபூர்வ

### செய்தியின் பின்னணியில்

மான வைபவங்கள் எதற்கும் பிடெல் காஸ்ட்ரோவை அழைப்பதில்லை.

பிடெல் காஸ்ட்ரோவின் நியூயோர்க் வருகையை ஆதரித்தும் எதிர்த்தும் நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

ஐ நா. வில் பிடெல் காஸ்ட்ரோ ஆற்றவிருக்கும் உரையை முழு உலகமுமே ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஏற்கனவே அமெரிக்க தொலைக்காட்சி நிலையங்கள் பிடெல் காஸ்ட்ரோவின் முந்திய சொற்பொழிவுகளின் பகுதிகளை மீண்டும் மீண்டும் ஒளிபரப்பியுள்ளன.

1960ஆம் ஆண்டில் பிடெல் காஸ்ட்ரோ ஐ நா.வில் நாலரை மணி நேரம் உரை நிகழ்த்தினார். இது இன்றுவரை ஐ.நா.வில் ஒருசாதனையாகும் இத்தடவை மற்றவர்களைப் போலவே அவரும் ஐந்து நிமிடநேரம் தான் பேச அனுமதிக்கப்படுவார்.

பிடெல் காஸ்ட்ரோ தனக்கே தனித்துவமான இராணுவ உடையை அணிந்துகொண்டு 21ஆம் திகதி சனிக்கிழமை அமெரிக்காவின் ஜோன் எட. கென்னடி விமான நிலையத்தில் உள்ள விசேஷ பாதுகாப்புப் பிராந்தியத்தில் வந்து இறங்கினார்.

16 ஆண்டுகளுக்குப் பின் அவர் அமெரிக்காவுக்கு வந்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கம் அவரைப் புறக்கணித்த போதும் அமெரிக்க வர்த்தக சமூகம் பிடெல் காஸ்ட்ரோவை வரவேற்க அழைப்பு மேல் அழைப்பு விடுத்துள்ளது எனவும் அறிவிக்கப்படுகிறது.

கியூபா மீதான அமெரிக்கப் பொருளாதார முற்றுகையை நீடிப்பதை அவர்கள் விரும்பவில்லை.

ஆனால் அமெரிக்க காங்கிரஸ் பொருளாதார முற்றுகையை மேலும் இறுக்க மாக்க முனைகின்றது. (க)

தொகுப்பு:- புதினன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## இலக்கு என்ன?

இப்போது வடக்கு—கிழக்கில் நடக்கும் போர் சமாதானத்துக்கான தடைகளை அகற்றுவதற்கே மேற்கொள்ளப்படுகிறது. அது எந்தவகையிலும் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல— இது ஜனாதிபதி சந்திரிகா.

"ஒப்பரேசன் சன்சைன்" இராணுவ நடவடிக்கையின் தனது இலக்கை எட்டும் வரை தொடர்ந்து நடத்தப்படும் எந்தவித காரணத்துக்காகவும் வடபகுதியிலிருந்து துருப்புகள் வாபஸ் பெற மாட்டா. — இது அமைச்சர் வேணக் அனுருத்த ரத்வத்த.

சமாதானத்துக்காகவே போர் நடத்தப்படுகிறது. அது தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல என்பதனை ஜனாதிபதி சந்திரிகா அடிக்கடி அழுத்திக் கூறி வருகிறார்.

தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவது பற்றிய செய்திகள் பொய்யானவை என்று காட்டுவதற்கான திரையாக அவர் இதனைப் பயன்படுத்துகிறார்.

வெளிநாடுகள், ஸ்ரீலங்காவுக்கு உதவும் நாடுகள் இனப்படுகொலைகள் குறித்து எய்யக் கூடிய அம்புகளைத் தடுக்கும் கேடயமாகவும் சமாதானத்துக்காகவே போர் என்ற வாசகத்தை வெகு கெட்டித்தனமாக அவர் பயன்படுத்துகிறார்.

"ஒப்பரேசன் சன்சைன்" எனப்படும் 'சூரியப் பிரகாசம்' இராணுவநடவடிக்கை அதன் இலக்கை எட்டும் வரை நிறுத்தப்படமாட்டாது. தம்மைத் திசை திருப்பமுடியாது— என்பது அனுருத்தவின் நிலைப்பாடு.

வேறு எந்தப் பாதுகாப்புப் பிரதி அமைச்சரும் செய்யாத விதத்தில், அவர் இராணுவ உடுப்புடனேயே களத்தில் நின்று துருப்புகளை வழி நடத்தும், உற்சாகப்படுத்தும் வேலைகளைச் செய்து வருகிறார் என்பது உண்மை தான்.

இராணுவ வெற்றியை ஈட்டித் தருவதாக சந்திரிகாவுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற இப்படி ஏதாவது செய்தாகத்தானே வேண்டும்! அப்போதுதானே அரசில் சந்திரிகாவுக்கு அடுத்த இரண்டாவது அந்தஸ்தைப் பெறமுடியும்.!

"சூரியப் பிரகாசம்" இராணுவ நடவடிக்கையின் இலக்கு என்ன என்பது சம்பந்தப்பட்டவர்களைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது; அத்தகைய இராணுவ இரகசியங்கள் வெளியிடப்படுவதில்லை அதன் காரணமாக அது குறித்துப் பல வகை ஊகங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

ஆனால் —

பெரிய அளவிலான தமிழர் இனப்படுகொலையே அதன் இலக்கு என்பது மட்டும் நிச்சயம். குடாநாட்டை முற்றுகையிட்டு அல்லது அதனைப் பிளவுபடுத்தும் இராணுவ வேலிகளை அமைத்து, அதற்குள் மக்களைச் சிக்க வைத்து இனப்படுகொலை செய்வதே அந்த இலக்காக இருக்க முடியும்.

எனவே குடாநாட்டுமக்கள் இதனைத் தடுத்து நிறுத்த விடுதலைப் புலிகளுக்கு உதவிக் கரம் நீட்ட வேண்டும். அவர்களுடன் இணைந்து போராட வேண்டும். வாழ்வா, சாவா என்று நாளாந்தம் சாகமல் இருக்க அது ஒன்றே வழி.

## ஆலயங்களில்

கொழும்புத்துறை, ஒக். 24

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி, ஸ்ரீ ஞானவயிரவர் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் கந்தசஷ்டி திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகி எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறும். (ஐ-30)

## புத்தூர் சோமாஸ்கந்த மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஒக் 24

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி நாளை புதன் கிழமை முதல் மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் வீதியில் உள்ள சிவன் கல்வி நிலையத்தில் இயங்கவுள்ளது.

ஆசிரியர்களையும், ஆண்டு 5, 8, 11, 13 மாணவர்களையும் அன்று காலை 8 30 மணிக்கு அங்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

## கோப்பாய் கல்விக்கோட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 24

கோப்பாய் கல்விக் கோட்டம், வலயம் ஒன்று கல்விப் பணிமனையில் தற்காலிகமாக இயங்குகின்றது. அதிபர்கள் தங்கள் பாடசாலை சம்பளப் பட்டியலையும், சுழக ஆசிரியர்கள் தங்கள் செப்டெம்பர் மாதக் கொடுப்பனவையும் சமுகம் தந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. (ஓ)

# சமாதான முயற்சிக்கு பூட்ரஸ் காலி ஆதரவு

நியுயோர்க், ஒக். 24

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து சமாதானத்தை உண்டாக்குவதற்கு ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையை —

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலி வரவேற்றதுடன் அதற்கு ஆதரவு தெரிவித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

ஐ நா. சபையின் பொன் விழா விசேட மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கும் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் இதனைத் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது.

சமாதானத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்துத் தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் செயலாளர் நாயகம் கூறினார்.

இதேவேளை —

ஜனாதிபதி சந்திரிகா நியுயோர்க்கில் உலகத் தலைவர்கள் பலரைச் சந்தித்துப் பேசி வருகிறார். சீனப் பிரதமருடன் நேற்று அவர் பேச்சு நடத்தினார்.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடனும் அவர் பேச்சு நடத்தவுள்ளார். (ஐ-ஈ-3)

# லங்கா கல்யாணியிலும் படையினருக்கு பொருள்கள்

## கொழும்பில் ஏற்றப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஒக் 24

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்ற 'லங்கா கல்யாணி'' கப்பலில் வடக்கில் உள்ள படையினருக்கான பொருள்கள் ஏற்றப்பட்டுவருவதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது

வடபகுதி மக்களுக்கான நிவாரணப் பொருள்களை இக்கப்பல் ஏற்றிக்கொண்டிருப்பதாகவும் —

விரைவில் அது வடக்கே புறப்படும் என்றும் — புனர்வாழ்வு,புனரமைப்பு அமைச்சு கொழும்பில் அறிக்கை வெளியிட்டு வருகிறது.

தற்சமயம் கொழும்பு துறைமுகத்தில் தரித்துநிற்கும் இக்கப்பலில் புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்படும் பொருள் பட்டியல் (Bill of Loading) இன்றியே பொருள்கள் ஏற்றப்படுவதாகவும் —

பட்டியல் எதுவும் இன்றி பொருள்கள் ஏற்றப்படுவதால் அவை நிவாரணப் பொருள்களாக இருக்க முடியாது என்றும்— தெரியவந்துள்ளது.

எனவே இக்கப்பல் படையினருக்கான பொருள்களை ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறைக்கே செல்லும் எனத் தெரியவருகிறது [ஐ-3]

# புலிகளை கண்டிக்க ஐ.நா.உரையை நன்கு பயன்படுத்தினார் சந்திரிகா

ஐக்கிய நாடுகள் சபையின் பொன் விழா விசேட மாநாட்டில் நேற்று முன்தினம் சிறப்புரை ஆற்றிய ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா —

தமது ஐந்து நிமிட நேர உரையின் கணிசமான பகுதியை தமிழீழ விடுதலைப் புலிகளைப் பெயர் குறிப்பிடாமல் கண்டிப்பதிலேயே செலவிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து வெளிநாடுகள் மத்தியில் பாதகமான எண்ணத்தைத் தோற்றுவிக்கும் முயற்சியில் அவரது பேச்சு அமைந்திருந்தது.

சந்திரிகா தமது உரையில் தெரிவித்ததாவது:-

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வைபவத்தில் இலங்கை மக்களை பிரதிநிதித்துவப் படுத்துவதில் ஆழ்ந்த மகிழ்ச்சியடைகிறேன்.

### அமைதி காப்பதும் அபிவிருத்தியும்

ஐ நா. சபை அமைதி காக்கும் நடவடிக்கைகளில் பெரும் பொறுப்பை ஏற்றுள்ளது. இதனால் அதன் புதிய நிகழ்ச்சி நிரலில் அபிவிருத்தி போக்கின் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது

1986 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அபிவிருத்திக்கான உரிமை பற்றிய பிரகடனத்தின் கோட்பாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகளும், வளர்முக நாடுகளும் முழு உறுதியுடன் சாதகமான முறையில் பயன்படுத்தவேண்டும்.

இல்லாவிட்டால் அபிவிருத்தி போக்கை போதியளவு முன்னேற்ற முடியாது.

### சக்திவாய்ந்த நாடுகளுக்கே சார்பு

ஐ.நா. சபையை பயனுள்ள வகையில் வலுப்படுத்துவது அதன் குறிக்கோளை முன்னேற்றுவதற்கு ஓர் இன்றியமையாத முன் தேவை என நம்புகிறோம்.

இந்த அமைப்பு சில சமயங்களில் மிகவும் சக்திவாய்ந்த நாடுகளின் நலன்களுக்கு பணி புரியும் அமைப்பாக தோற்றமளிப்பது வருந்தத்தக்கதாகும்.

ஐ நா. சபை எல்லாத் துறைகளிலும் தீர்மானத்தை எடுப்பது சகல உறுப்பினர்களின் முழுமையான ஈடுபாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

குறிப்பாக பாதுகாப்புச் சபை கூடுதல் அங்கத்துவம் உள்ளதாக மாறவேண்டும்.

### இனப்பதற்றம்

ஆனால் நாம் இனப்பதற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ளோம். இந்தப் பதற்றங்களை பயங்கரவாத சக்திகளும், பேரினவாதச் சக்திகளும் இயல்பற்ற விதத்தில் உயர்த்திப்பிடித்து வருகின்றன.

இருந்தபோதிலும் எமது பிரச்சினைகளும் அரசியல் பேச்சுவார்த்தைகள், தீர்வுகளை நாடுவதன்மூலம் தனது ஆணையை நிறைவேற்றுவதற்கு எனது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

இருந்தபோதிலும் எமது வழியில் தடைகள் இருக்கின்றன

தமிழ்ச் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக்கூறும் ஓர் ஆயுதம் தாங்கிய குழு பொதுமக்களால் அடுத்தடுத்து தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களுக்கு எதிராக வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு இருந்து...

எமது மண்ணில் வாழும் அனைவருக்கும் சமாதானம், நீதி ஆகியவற்றை உறுதி செய்வதில் இருந்து இந்த அரசாங்கங்களை தடுத்து வந்துள்ளது.

இந்தக்குழு வெளிநாட்டு மண்ணில் செயற்படுகிறது. தனக்கு நிதி திரட்டுவதற்கு சர்வதேச அமைப்பொன்றை நடத்திவருகிறது.

### பயங்கரவாதத்தை தடுக்க வேண்டும்

உலக நாடுகளில் பயங்கரவாதத்தை எதிர்த்துப்போராடவும், பயங்கர வாதிகள் வன்முறைகளை கைவிட்டு ஜனநாயக போக்கில் பிரவேசிப்பதற்கு நிர்ப்பந்திக்கவும் உறுதிவாய்ந்த சர்வதேச நடவடிக்கை இன்றியமையாதது.

அதிஷ்டவசமாக பயங்கரவாதத்தின் தன்மை பற்றிய தத்துவார்த்த வாதம், பிரதிவாதங்களுடன் மூலம் இதனை நோக்கி உறுதியான நடவடிக்கை எடுப்பது தடுக்கப் பட்டுள்ளது.

ஆயினும்பயங்கரவாதத்தை அடக்குவது பற்றிய சார்க் உடன்படிக்கை ஒரு கூட்டான பதிலை வகை செய்கிறது.

இது பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான ஓர் சர்வாம்சம் பொருந்திய சட்டவரையறையையும் நடைமுறை நடவடிக்கைகளையும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

இதில் இருந்து தோன்றக்கூடிய கடப்பாடுகளுக்கு சட்ட வினைவலுக் கொடுப்பதற்கு ஐ. நா. சபை இதே போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் — என்றார் அவர். [ஈ-3]

## தீ இன்னும் அணையவில்லை

கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதலுக்கு இலக்கான கொலன்னாவ, ஊறுகொடவத்தை எண்ணெய்க் குதங்களில் ஒன்று இன்னமும் தொடர்ந்து எரிந்து கொண்டிருப்பதால் கொழும்பில் தீ மூட்டம் காணப் படுகிறது என்று சிங்கப்பூர் வானொலி நேற்று தெரிவித்தது. (ஐ-3)

## நியுயோர்க்கிலும்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா அரசு இழைக்கும் அநீதிகள் தொடர்பாக ஐ நா. அதிக அக்கறை காட்டவில்லை என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கண்டனக்குரல் எழுப்பினர்.

## ஞாயிறு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்த் தாக்குதலைத் தொடுத்திருந்தனர்.

காலை, நண்பகல், இரவு என்று மூன்று வேளைகளிலும் சண்டை — விட்டுவிட்டு பெரிய அளவில் நடைபெற்றது.

ஞாயிறு இரவு இடிமுழக்கம், கடும் மழையின் மத்தியிலும் திங்கட்கிழமை விடியும் வரை பயங்கரச் சண்டை நடைபெற்றது

இச்சண்டைகளில் மொத்தம் 27 படையினரும் 2 அதிகாரிகளும் இறந்ததாக அறிவிக்கப்பட்டது

4 அதிகாரிகள் உட்பட 51 படையினர் கடும் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்த எண்ணிக்கைகள் அதிகமாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப் பட்டது

மோதலில் இறந்த தமது சக சிப்பாய்களின் சடலங்களை மீட்டுச் செல்வதற்காக படையினர் ஞாயிறு இரவு பெருமுயற்சி எடுத்தனர். கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இராணுவத்தினரின் முன்னேற்ற முயற்சியை முறியடிப்பதற்காக விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

ஞாயிறு காலையும், பகலும் நடந்த சண்டைகளில் 3 யுத்த டாங்கிகள் அழிக்கப்பட்டதும், 8 டாங்கிகள் சேதமாக்கப்பட்டதும் தெரிந்ததே.

"சூரியப் பிரகாசம்" ஆரம்பமாகி நேற்றுடன் ஏழு நாள்களாகும். ஆறு நாள்களும் முன்னேறும் முயற்சியில் பெரும் எடுப்பில் ஈடுபட்ட படையினர் நேற்று சற்று ஓய்ந்து காணப்பட்டனர். இருதரப்புகளுக்கும் இடையே சிறுசிறு மோதல்களே இடம் பெற்றன.

எனினும்''சூரிய பிரகாசம்'' நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுவதாக பி.பி.ஸிக்கு நேற்றிரவு அளித்த பேட்டியின் போது பிரிகேடியர் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

இதேவேளை —

யாழ். குடாநாட்டில் ஆரம்பித்துள்ள மழையால் இராணுவத்தினரின் பணிகள் தடைப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது என்றும் —

விமானப்படையினரின் பணியும் தாமதமாகியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டதாக செய்திதாஸ் அறிவித்தது. (அ-ஈ-3-15-13)

## சூரிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அல்ல என்றும் —

கிரகணம் ஆரம்பித்து முடிவடையும் வரை சூரியனை நேரடியாகவோ அல்லது வேறு வழிகளிலோ பார்ப்பதைத் தவிர்த்தல் வேண்டும் என்றும்—

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விடயத்தில் விசேட கவனம் செலுத்துமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இன்று காலை 7 22 மணி முதல் முற்பகல் சுமார் 10 மணி வரை சூரிய கிரகணம் இடம் பெறுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீண் உயிரிழப்புகளைத் தடுக்க உடன் பதுங்குகுழி அமையுங்கள்!

## அரசியல் துறையினர் அவசர வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 24

மக்களை அழிப்பதற்காகப் படையினர் மிகப் பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். உடனடியாகத் தற்காப்பு நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொண்டு எதிரியின் மனிதநேய மற்ற நோக்கத்தை முறியடிக்குமாறு யாழ். மாவட்ட அரசியல் துறையினர் பொதுமக்களுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட தமிழின ஒழிப்பு நடவடிக்கையின் உச்சக் கட்டமாகத் தமிழ் மக்கள் மீதான கொடூர மிக்க தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

எமது பதில் நடவடிக்கையாக எமது மனிதவளத்தைக் காப்பது முதன்மை பெறுகிறது.

எமது மக்களை அழிப்பதற்காக மிகப் பாரிய நடவடிக்கைளைப் பகைவன் மேற்கொண்டு வருகிறான்.

மனித வளம் பெறுமதிமிக்கது. மனிதவளத்தை இல்லாதொழிப்பதன் மூலம் ஒரு இனத்தின் அடிவேரை அசைத்து விடலாம். போர்க்களத்துக்கு அப்பாலும் நீண்ட தூர ஷெல்வீச்சு, விமானக் குண்டு வீச்சு ஆகியவற்றின் நோக்கமே இதுதான்.

பின்வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முனைப்புடன் செயற்படுத்துதல் மூலம் எமதுமக்கள் எதிரியின் மனித நேயமற்ற நோக்கத்தை முறியடிக்கலாம்.

★ இல்லங்கள், பாடசாலைகள் அலுவலகங்கள், மக்கள் கூடுமிடங்கள் ஆகியவற்றில் பதுங்குகுழிகளை அமைத்தல் அவசியம். இவற்றை அமைப்பதற்கான ஒத்துழைப்பை ஊர்காப்புக் கழகங்கள் நல்கத் தயாராகவுள்ளன.

★ எதிரியின் தாக்குதலினால் காயமுற்றோர்க்குத் தவிப்போருக்குக் குருதிக் கொடை புரிதல் மிக உன்னதமான மனித நேயப் பணியாகும். தயங்காது விரைவாக வட்டச் செயலகங்களுடன் தொடர்பு கொண்டு, பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்வதன் மூலம் அவசியம் ஏற்படும் போது குருதிக்கொடைக்குத் தயாராகுங்கள்.

★ எதிரியினால் ஏவப்படும் எறிகணைகளிற் சில வெடிக்காமலிருப்பதும் உண்டு. அல்லது எதிரி தான் பின்வாங்குமிடங்களில் மனித அழிவை ஏற்படுத்தும் முகமாக வெடிப் பொருட்களை விட்டுச் செல்வதுமுண்டு. இனங்காண முடியாத பொருட்களைக் காணுமிடத்து அவற்றைக் கையாளாது — அவ்விடத்திலேயே விட்டு வைத்து — அயலில் உள்ள எமது செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். அவர்கள் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பர்.

மேற்படி நடவடிக்கைகள் யாவும் எமது மனித வளத்தைக் காப்பாற்றுவதற்கான — உயிரழிவைத் தடுப்பதற்கான—உடனடிச் செயற்பாடுகள் ஆகும். இவற்றைக் கைக்கொள்ளுமாறு எமது மக்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## ஆயிரம் மெ. தொன் அரிசி 'ஓசன் கரியமில்' வந்தது

யாழ்ப்பாணம், ஒக். 24

ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியுடன் 'ஓசன் கரியர்'' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் முதலில் காங்கேசன்துறைக்குச் சென்ற இக்கப்பல் அங்கு படையினரின் சோதனைகளை முடித்துக்கொண்டு பின்னர் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

கப்பலில் இருந்து அரிசி இறக்கும் பணி உடன் அங்கு ஆரம்பமானது. (ஐ-3)

## யாழ்ப்பாணத்தை பிடிக்கும் ஆற்றல் படைககு இல்லை!

### இராணுவ ஆய்வாளர்கள் கருத்து

நியுயோர்க், ஒக். 24

வடபகுதி மீதான இராணுவ நடவடிக்கை பொருத்தமான நேரத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்றும்—

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் ஆற்றல் இலங்கை அரசப் படைகளிடம் இல்லை என்றும் இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளதாக 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' வானொலியின் புதுடில்லிச் செய்தியாளர் மைக்கல் றோச் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு விஜயம் செய்துவிட்டு திரும்பிய அவர் இலங்கை நிலைமை குறித்து வெளியிட்ட செய்தியிலேயே இதனை தெரிவித்தார்.

## ஐ. நா. தின நிகழ்வுகள்

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும் ஐக்கிய நாடுகள் தின நிகழ்ச்சிகள் நாளை புதன் பிற்பகல் 2 மணி முதல் தலைவர் லயன் வே. தில்லைநாதன் தலைமையில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா.ஞானக்குமாரனும்—

கௌரவ விருந்தினராக வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். சுந்தரலிங்கமும் கலந்து கொள்வர். [ஐ)

## முடமாவடி விபத்தில் இருவர் காயம்

நல்லூர் முடமாவடிச் சந்தியில் நேற்று மாலை மோட்டார் சைக்கிள், லான்மாஸ்டர் மற்றும் சைக்கிள் மோதிக் கொண்டதில் இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் சைக்கிளில் சென்றவரான சாவகச்சேரியைச் சேர்ந்த சண்முகம் ஸ்ரீக்குமார் [வயது 22], மோட்டார் சைக்கிளில் சென்றவரான கொண்டாவிலைச் சேர்ந்த பரஞ்சோதி அம்பிகைபாதன் [வயது 32] ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

அம்பிகைபாதன் சுயநினைவிழந்த நிலையில் உள்ளார்.

இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

(ஐ-13-15)

## சிவில் பாதுகாப்பு படைக்கு விரைவில் ஆட்சேர்ப்பு!

வடக்கு யுத்த நிலையால் தெற்கில் ஏற்படும் பாதிப்புக்கு முகம் கொடுக்கும் வகையில் ''சிவில் பாதுகாப்பு படை'' என்ற துணைப்படை ஒன்றை ஸ்ரீலங்கா அரசு அமைக்கவிருக்கிறது.

இந்தப் படை அமைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி நேற்று வெளியிட்டார்.

தலா இரண்டாயிரத்து 500 பேரைக் கொண்டவையாக 20 பிரிவுகள் மாவட்ட, பிரதேச, கிராம சேவையாளர் பிரிவுகளில் அமைக்கப்படவிருக்கின்றன. இதற்கென விரைவில் ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது.

தேசிய நெருக்கடிகளையும், பேரழிவுகளையும் சந்திக்கும் போது உடன் உதவ இந்த துணைப்படை அமைக்கப்படவிருக்கிறது. (ஐ-3)

## மொனராகல

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இச்சம்பவத்தில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

தாக்குதலை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த கிராமவாசிகள் நூற்றுக் கணக்கில் மூடை முடிச்சுக்களுடன் வெளியேறி இடம்பெயர்ந்து செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க-3-6)

## புக்காரா, சுப்பசொனிக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டுகள் வீசப்பட்டன.

புக்காரா விமானம் ஒரே தடவையில் எட்டு றொக்கட்டுக்களை வீசியது. சுப்பசொனிக் விமானத்தில் இருந்தும் குண்டு வீசப்பட்டது.

இக் குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரிய வரவில்லை. (ஐ 3-15)

## நேற்றும் படையினர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஷெல்கள் விழுந்து வெடித்த அநேக இடங்களில் இருந்து பொதுமக்கள் ஏற்கனவே வெளியேறி விட்டதால் உயிரிழப்புகள் ஏற்படவில்லை. எனினும் படையினர் ஏவிய ஷெல்களால் உடைமைகளுக்குப் பெருநாசம் ஏற்பட்டிருக்கிறது. வீடுகள் பல பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை 7.45 மணிக்கு இருபாலைப் பகுதியில் மாத்திரம் 16 ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இத்தாக்குதலின்போது வீடு ஒன்றின் முற்றத்தில் விழுந்த ஷெல்லினால் ஒருவர் பலியானார்.

இருபாலை கிழக்கைச் சேர்ந்த சிவகுருகுமாரசாமி (வயது 56) என்பவர் நெஞ்சுபிளந்து படுகாயமடைந்தார்

இவர் ஆஸ்பத்திரியில் அதிதீவிரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட பின்னர் அங்கு மரணமானார்.

இதேவேளை—

நேற்று மாலை கரந்தன் பகுதியில் விழுந்த ஷெல்லினால் ஒருவர் காலில் படுகாயமடைந்தார். அவரது இடது பாதம் துண்டிக்கப்பட்டது.

அச்செழுவில் இருந்து இடம்பெயர்ந்து மட்டுவிலில் வசிக்கும் இராமன் கிட்டினன் [வயது 44] என்பவரே பாதம் துண்டிக்கப்பட்டவராவார்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன் அச்செழுவில் இடம் பெற்ற ஷெல் தாக்குதலின்போது உயிரிழந்த உறவினரின் [சாந்தன்] சடலத்தை மீட்டுவருவதற்காக சென்றவேளையே நீர்வேலி கரந்தன் பகுதில் இவர் ஷெல் தாக்குதலுக்கு இலக்கானார்.

நேற்று முன்தினமிரவு கோப்பாய் பகுதியில் விழுந்த ஷெல்லினால் ஒருவர் காயமடைந்தார். நயினாதீவில் இருந்து இடம்பெயர்ந்து கொக்குவிலில் வசித்து வந்த தியாகராசா ஜெகசீவன் (வயது 26) என்பவரே கோப்பாய் பகுதியில் தமது உறவினரின் வீட்டைப் பார்த்துவரச் சென்றபோது ஷெல்லினால் காயமடைந்தார். இவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஐ- 13-15]

## 10 ஆயிரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பித்து வைக்கப்பட்டது.

பேரணியில் கலந்து கொண்டோர் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான கோஷங்களையும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கோஷங்களையும் எழுப்பினர்.

பல்வேறு நாடுகளையும் சேர்ந்தவர் இப்பேரணியின் முடிவில் உரையாற்ற ஏற்பாடாகியிருந்தது.

அனைத்துலக தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடந்த பேரணியில் பிரான்ஸ் ஜேர்மனி, சுவிஸ், நோர்வே, டென்மார்க், பிரிட்டன், இத்தாலி ஆகிய நாடுகளில் இருந்து வந்து தமிழர்கள் பங்குபற்றினர்.

தமிழீழப் போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் ஐரோப்பிய நாடாளுமன்றம் அங்கீகரிக்கவேண்டும்.

ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலை நடவடிக்கையை உடன் நிறுத்தி பேச்சுவார்த்தைக்கான புதிய முன் முயற்சிகளை எடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் ஐரோப்பியநாடுகள் ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்து, ஸ்ரீலங்கா அரசுக்கு வழங்கி வரும் உதவிகளை நிறுத்தவேண்டும்.

—ஆகிய கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜர் பேரணியின் முடிவில் ஐரோப்பிய நாடாளுமன்றத் தலைவரிடம் கையளிக்கப்பட இருந்தது.

பேரணியின் முடிவில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றும் [illegible] (ஐ-3)

POLIO PLUS

ROTARY INTERNATIONAL

பெற்றோர்களே!

போலியோ உங்கள் பிள்ளைக்கு வந்தால்...

அவர்களின் காலை அல்லது கையை இழுத்து ஊனமாக்கினால்.....

அவர்கள் எதிர்காலத்தை எண்ணி ஏக்கப் பெருமூச்சு விட நேரிடும்....

அப்படி ஒரு துரதிர்ஷ்டம் ஏற்படாமல் இருக்க உங்கள் ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து கொடுங்கள்.

அதற்கான நாள் நவம்பர் 4

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில 24- 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org